பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 03 திங்கட்கிழமை 17.06.2024 கதிர் 222

# 90 ஆயிரம் காணி உறுதிகள் வடக்கில் வழங்கப்படவேண்டும்

## ஜனாதிபதி மன்னாரில் தெரிவிப்பு

வடக்கில் 90 ஆயிரம் உறுதிகள் வழங்கவேண்டியுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'உறுமய' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. திருகோணமலையில் நடக்கும் வழக்கில் சுமந்திரன் முன்வைத்துள்ள சமர்ப்பணத்தில் உள்ள ஒரு விடயம் தொடர்பாகத்தான் இந்த வாக்குவாதம் எழுந்தது என்றாலும் பின்னர் அது புலம்பெயர் முதலாளிகளுக்குக் கட்சியில் இடம்கொடுப்பது தொடர்பாகத் திரும்பிப் பெரும் பிரச்சினையானது.

முதல் விடயத்தில் கட்சியின் தலைவர் வற்புறுத்தி விடாப்பிடியாக நின்றதன் காரணத்தால்தான் ஜனவரி 21 பொதுக் குழுக் கூட்டத்தில் அவரால் அனுமதிக்கப்பட்ட 20 பேர்வரையிலானவர்களை கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்க தானும் அனுமதித்தார் என்று சுமந்திரன் தனது சமர்ப்பணத்தில் கூறியிருப்பதை நேற்றுத்தான் மாவையர் ஆட்சேபித்தார். கட்சியின் வழக்குத் தொடர்பாக நேற்றைய மத்திய குழுவில் ஆராயப்பட்டபோது மாவையர் இது தொடர்பில் குரலை உயர்த்தினார். பதிலுக்கு சுமந்திரனும் தன்னுடைய நிலைப்பாட்டில் பிடிவாதமாக ☞ 2

## இந்த ஆண்டு புதிய வரி எதுவும் விதிக்கப்படாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

இந்த ஆண்டு புதிதாக எவ்வித வரிகளும் அமுல்படுத்தப்பட மாட்டாது. அத்து டன் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிகளும் மாற்றியமைக்கப்பட மாட்டாது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மஹரகவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி அடுத்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும். இந்த ஆண்டு புதிதாக எவ்வித வரிகளும் அமுல்படுத்தப்பட மாட்டாது. அத்துடன் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வரிகளும் மாற்றியமைக்கப்பட மாட்டாது. ☞ 8

## தகவல் தொழில்நுட்பம் மூலம் 5 பில்லியன் டொலர் திரட்டலாம்

### அனுரகுமார தெரிவிக்கும் யோசனை இது

எமது நாட்டின் பொருளாதாரத்தில் தகவல் தொழில் நுட்பம் பெரும் பங்களிப்பை நல்குகின்றது. குறுகிய காலப்பகுதிக்குள் ஐந்து பில்லியன்களைஈட்டுவதற்கு திட்டமிட்டுள்ளோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றுள்ள அவர் அங்கு மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தவறான பொருளாதார நிலைப்பாடுகளைக்கொண்ட கொள்கையிலிருந்து நாம் வெளியேற வேண்டும். உற்பத்திப் பொருளாதாரத்தினை மையப்படுத்திய கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதாரத்தில் தகவல் தொழில் நுட்பம் பெரும் பங்களிப்பை நல்குகின்றது. குறுகிய காலப்பகுதிக்குள் ஐந்து பில்லியன்களைஈட்டுவதற்கு திட்டமிட்டுள்ளோம். இந்தியா தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக 240 பில்லியன் வருமானத்தினை அடைந்துள்ளது.

குறுகிய காலத்துக்குள் ஐந்து பில்லியன்களை அடைந்தால் விரைவாக நாம் பொருளாதார மேம்பாட்டை நோக்கிச் செல்ல முடியும். எனினும் அதற்குரிய வசதிகள் டெலிக்கொம் நிறுவனத்துக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். ☞ 2

## எதிர்ப்பு

சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்க அரசியலமைப்புசபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வாய்ப்புள்ளதாக எதிர்க்கட்சி உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சேவைநீடிப்புக்கு ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு தெரிவித்து வருவதாக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசமைப்பு பேரவை தீர்மானம் எடுக்க தயாராகவுள்ள நிலையில், கட்சியின் கருத்தின்படி எதிர்வரும் 18ஆம் திகதி அரசியலமைப்புசபையின் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் செயற்படுவார்கள் என்று எதிர்க்கட்சி சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு அரசி ஏற்றுமதிக்குத் திட்டம்

### தன்னிடமுண்டு என்கிறார் சஜித்

தான் ஆட்சிக்கு வந்தால் அரிசியை மத்திய கிழக்கு நாடுகள்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அநுராதபுரம் விவசாயிகள் மாநாட்டில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயிகளுக்கு சிமாட் விவசாய ☞ 2

## எரிபொருள் விலைகளை உடன் குறைக்க முடியாது

### அமைச்சர் கருத்து

உலக சந்தையில் மசகுஎண்ணெய்விலை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டில் எரிபொருட்களின்விலைகளை உடனடியாக குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டு ☞ 2

## மியான்மரில்

## சிக்கியுள்ள இலங்கையர்களில் சிலரை விடுவிக்க நடவடிக்கை

மியன்மார் சைபர் முகாம்களில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 49 இலங்கையர்களில் சிலரை எதிர்வரும் நாட்களில் விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மியன்மார் விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பிய நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

மியன்மார் சைபர் முகாம்களில் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் உரிய நேரத்தில் தமிழ் அரசு முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் இன்றும் முடிவுகள் எடுக்கப்படவில்லையென எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக்கட்சியின் மத்திய குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அதன் பின்னர் இடம்பெற்ற ☞ 2

## தேசிய அருங்காட்சியகத்தில்

## தீயணைப்புக் கட்டமைப்பினை நிறுவுவதில் ரூ 9 கோடி நட்டம்

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் தீயணைப்பு கட்டமைப்பை நிறுவுவதில் சுமார் 9 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசியகணக்காய்வாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் 2023 ஆண்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தீயணைப்பு கட்டமைப்பைநிறுவதற்கானபொறுப்புதகுதியற்ற ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டமையே நட்டம் ஏற்படுவதற்கான காரணமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முதலாவது ஒப்பந்ததாரர் முறையாக செயற்படாததால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு மற்றுமொரு தரப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரியில் இதற்காக முதலாவது ஒப்பந்ததாரர் 10 கோடி ரூபா மதிப்பீட்டை வழங்கியுள்ளார்.

இதில், 4 கோடிக்கும் அதிகமான கொடுப்பனவு செலுத்தப்பட்ட நிலையில் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் அலுவலகம் ☞ 8

## மடுவுக்கு செல்வோரை கைது செய்தால் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவிக்கவும்

### ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவுறுத்து

மடு மற்றும் சிவனொலிபாத மலை போன்ற புனித தளங்களுக்கான நுழைவு வீதிகள் அவற்றை வழிப்பட வருவோருக்காகவே அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்து தண்டப் பணம் அறவிடுவது நியாமற்றதெனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

மடு தேவாலயத்தில் வழிபாட்டுக்காக வருவோர் கைது ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

நின்றார். அன்று மாவையர் அப்படிச் சொன்னார் என்பதால்தான் தான் தனது சமர்ப்பணத்தில் அதனைச் சொல்லவேண்டி வந்தது, தான் சொன்னதில் எந்தப் பொய்யும் இல்லை என்பதை அவரும் உயர்த்திய குரலிலேயே சொன்னார்.

மாவையருடன் கூட வந்திருந்த அவரது மகன் இடையில் புகுந்து கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, மத்தியகுழு உறுப்பினர் அல்லாதவர்கள் இங்கு எப்படி கருத்-துக்கூற முடியும் என்று அவருக்கும் ஒரு குட்டு வைத்தார் சுமந்திரன். இதனால் கடுப்பாகிய மகன் தந்தையைப் பார்த்தும் காரசாரமாகக் கூறிவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

இந்த விவகாரத்தைத் தொடர்ந்து கூட்டம் கடும் சூடாகியிருந்தது. புலம்பெயர் முதலாளிகளுக்கு கட்சியில் உறுப்புரிமை வழங்கப்படுவது தொடர்பான விடயத்திலும் அது எதிரொலித்தது. கட்சிப் பத்திரிகையாகத் தொடங்கப்பட்ட புதிய சுதந்திரன் பத்திரிகையை இப்போது கட்சியின் மத்திய குழு அனுமதி இன்றியே தன்னிச்சையாக நடத்திவருபவரான அகிலன் முத்துக்குமாரசாமி மற்றும் ஐபிசி தமிழ் ஊடகம் மற்றும் 'றீச்சா'வின் முதலாளியான பாஸ்கரன் ஆகியோர் கட்சி உறுப்புரிமை தொடர்பில்தான் இந்த மோதல் மீண்டும் சூடுபிடித்தது. அகிலனுக்கு மாவையர் ஆதரவளிக்கிறார் என்பது மத்திய குழுவில் பலரதும் குற்றச்சாட்டாக இருந்தது. அதுபோன்றே பாஸ்கரனிடம் பொதுக்குழுக் கூட்டம் நடத்தப் பணம் பெற்றுவிட்டு, அதற்காக கட்சியின் தலைவரையும் கட்சியையும் சகட்டுமேனிக்கு விமர்சிக்கும் அவருக்கு உறுப்புரிமை வழங்க முடியாது என்றும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பாஸ்கரனுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நின்றார். அவருக்கு உறுப்புரிமை வழங்கக்கூடாது என்ற முடிவுக்குத் தாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார் என்றும் பதிவு செய்தார்.

அடுத்தடுத்த மத்திய குழுக் கூட்டங்களில் இந்த விவகாரம் இன்னும் பெரியளவில் பிரச்சினைகளைக் கிளப்பும் என்று தெரிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 90 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திற்கு 5000 காணி உறுதிகள் வழங்கப்படவுள்ள நிலையில், அவற்றில் 442 உறுதிகள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன.

அங்கு மேலும் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த முறை வடக்கிற்கு வந்தபோது மன்னாருக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. மாத இறுத்திக்குள் வருவதாக சொன்னேன். இன்று வந்துவிட்டேன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அபிவிருத்தி தொடர்பில் கூறிய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வோம்.

இங்கு வவுனியா - மன்னார் மக்கள் வந்துள்ளனர். இங்கிருந்து செல்லும்போது காணி உரிமையுடன் செல்வீர்கள். வரும்போது உரிமை இருக்கவில்லை. செல்லும் போது உரிமை இருக்கும். இந்த காணிகளை இனி உங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். வடக்கில் 90 ஆயிரம் உறுதிகள் வழங்க வேண்டியுள்ளது. அவற்றில் 40 ஆயிரம் உறுதிகள் எந்த பிரச்சினைகளும் இல்லாதவையாகும்.

கிராமங்களுக்கே சென்று அதற்குரிய பணிகளை செய்யுமாறு ஆளுநர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனைவரையில் காணி அனுமதி பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. அவற்றை எந்த நேரத்திலும் இரத்துச் செய்ய முடியும் என்பதால், காணி உறுதி குறித்து மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. காணியை சுத்தம் செய்து அதற்குள் விளைச்சல் செய்து அபிவிருத்தி செய்த பின்பும் அதற்கான உரிமை மக்களுக்கு கிடைக்கவில்லை.

சிலர் 85 வருடங்களாக இந்நிலையில் இருந்தனர். 20 இலட்சம் பேர் இப்படியாக உரிமை இல்லாமல் இருக்கிறார்கள். அதனை மாற்றியமைக்க வேண்டுமென நான் தீர்மானித்தேன். கொவிட் - பொருளாதார நெருக்கடி காலங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஒட்டுமொத்தமாக சொத்துக்களையும் இழந்தனர். சொத்துப் பெறுமதி வீழ்ச்சி கண்டது. நாம் இப்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவரும்போது அதன் நன்மைகளை சாதாரண மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க எம்மால் முடிந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

சாதாரண மக்கள், பொருளாதார நெருக்கடியால், காணிகள், சொத்துகள், செல்வங்களை இழந்தனர். அதனால் காணி அனுமதி பத்திரம் கொண்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்க தீர்மானித்தேன். இந்த வேலைத்திட்டத்திற்கு முன்பாக கொவிட் - பொருளாதார நெருக்கடி காரணமாக இழக்கப்பட்ட சொத்துப் பெறுமதி உறுமய திட்டத்தினால் மீண்டும் வலுவடையும்.

ஆசியாவில் எந்தவொரு நாடும் காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கவில்லை. அதனால் நாம் பெரும் புரட்சி செய்திருக்கிறோம். மேல் மாகாணத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் வசிக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு உரிமைகளை வழங்கியுள்ளோம். சாதாரண மக்கள் பட்ட கஷ்டங்களுக்கு நியாயம் செய்திருக்கிறோம். காணி உறுதிகளின் பெறுமதிகளை வடக்கு மக்களே அதிகமாக அறிவர். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் புலிகளால் அபகரிக்கப்பட்டன. இராணுவம் முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டன.

தற்போது மக்களுக்கு காணிகளுக்கான நிரந்த உரிமை கிடைப்பதால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ கூடிய சூழல் உருவாகும். உங்களுக்கு கிடைத்த காணிகளை விற்றுவிடாமல். அபிவிருத்தி செய்து இதிலிருந்து நல்ல பயன்களைப் பெறுமாறு கூறி வாழ்த்துகிறேன்.' என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென அதன் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வர்த்தகக் குறியீட்டின்படி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதன்படி, அங்கு தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டுமெனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 வீதமான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுவதால், உலக சந்தை விலைகளுக்கு அமைவாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாதெனவும் சுலக்ஷன ஜயவர்தன கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் விலை 27 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பரில் ப்ரெண்ட் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 94 அமெரிக்க டொலராக காணப்பட்டது.

தற்போது 74 டொலராக குறைவடைந்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## தகவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெலிக்கொம் நிறுவனத்தினை விற்பனை செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சித்துக்கொண்டிருக்கின்றார். 2040 ஆம் ஆண்டு ஆகின்றபோது நாட்டில் அதிகம் மீள்புதுப்பிக்க வல்ல சக்தியைக் கொண்டதாகவே அனைத்து துறைகளும் அமையவுள்ளன.

எம்மால் மன்னாரில் சிறந்த காற்றாலைத்திட்டத்தினை முன்னெடுக்க முடியும். 45 ஜிஹாவோல்ட் பெறுமதியான சக்தியைப் பெறமுடியும். அதனை வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்ய வேண்டியதில்லை என்றார்.

## தமிழ் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் உரிய நேரத்தில் தீர்மானம் எடுப்போம். தேர்தலில் வேட்பாளர்கள் யார் என்று இன்னமும் தெரியாது. அவர்களுடைய தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்பின்னர் தீர்மானிப்பதாகவே முடிவெடுத்திருந்தோம்.

அத்துடன் தங்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ள இருவர் தமிழரசுக்கட்சியின் தலைமைகாரியாலத்திற்கு வந்து எங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். இது ஒரு ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை. நாங்கள் தொடர்ந்தும் இவ்வாறானவர்களுடன் பேசுவோம். ரணில் விக்கிரமசிங்க தன்னை வேட்பாளராக அறிவித்தால் அவரோடும் பேசுவோம். முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஆனால் இதுவரை அதிகாரபகிர்வு தொடர்பாக பொதுவெளியில் சொல்ல கூச்சப்பட்டுக்கொண்டிருந்த வேட்பாளர்கள் போட்டிபோட்டுக் கொண்டு 13 ஆம் திருத்தத்தினை முழுமையாக அமுல் படுத்துவோம் என்று சொல்லத்தலைப்பட்டுள்ளனர்.

அது முழுமையான தீர்வு அல்ல அதனை நாம் ஏற்கவில்லை ஆனால் அரசியலமைப்பில் உள்ளதையாவது அமுல்படுத்தவேண்டும் என்பதை நாம் சொல்லியிருக்கின்றோம். எனவே அந்த பேச்சுவார்த்தைகள் ஆராக்கியமாக இருந்தது. அவர்கள் சொன்னதை செய்வார்களா என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கின்றது.

மும்முனைப்போட்டி ஒன்று ஏற்படுமாக இருந்தால் தமிழ் பேசுகின்ற மக்களின் வாக்குப்பலம் பிரதானமாக இருக்கும். இதனை நாம் உதாசீனம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக எமது பேரம்பேசுதலை நடத்தவேண்டும். சந்தர்ப்பத்தை சரியாக உபயோகப்படுத்தவேண்டும் என்ற கருத்தோடு நாங்கள் இருக்கின்றோம்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக கடந்த மத்தியகுழு கூட்டத்திலேயே பலர் எதிரான கருத்துக்களை தெரிவித்திருந்தனர். எனவே இன்று அதைப்பற்றி பேசவில்லை. மக்களது கருத்துக்களையும் அறிந்து தனிப்பட்ட கருத்துக்களை சொல்வதற்கான சுயாதீனம் அனைத்துகட்சி உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன சிவாஜிலிங்கம் வழமையாகவே நிற்பவர். பழக்கதோசத்தில் அவர் நிற்கலாம் அதில் எனக்கு பிரச்சனையில்லை என்றார்.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபகரணங்களை வழங்குவதன் ஊடாக எமது வீரம் மிக்க விவசாயிகளை முன்னேற்றி நாட்டின் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவோம்.

உணவு ஏற்றுமதி, மரக்கறி, பழங்கள் ஏற்றுமதி உள்ளிட்ட யுகத்தினை நாம் உருவாக்குவோம். நாம் விவசாயிகளை மையப்படுத்தி திட்டமொன்றை வகுத்துள்ளோம்.

விவசாயிகளின் நெல்லை அரசியாக மாற்றி மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டமொன்று என்னிடமுள்ளது. மாலைதீவுகளுக்கு அரசியை ஏற்றுமதி செய்யும் திட்டமொன்றும் உள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்வதன் ஊடாக விவசாயிகளும் டொலர்களை சம்பாதிக்கும் யுகத்தினை உருவாக்குவோம் என்றார்.

## மடுவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படும் பட்சத்தில் உடனடியாக அது குறித்து ஜனாதிபதி அலுவலகத்திற்கு அறிவிக்கும்படியும் ஜனாதிபதி இதன்போது அறிவித்தார்.

மன்னார் மாவட்டச் செலயகத்தில் நேற்று நடைபெற்ற விசேட மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மூன்று தசாப்த கால போருக்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று வளர்ச்சி கண்டு வருகிறது. இம் மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும். இம்மாவட்டத்தில் சுற்றுலா, மீன்பிடித் தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பெற்றுகொள்வதற்கான வாய்ப்புக்களும் அதிகம் உள்ளன.

அதேபோல் இப்பகுதிகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவே உள்ளன. தேவை மிகுதியான வலுசக்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வது குறித்து அந்நாட்டு ஆளும் தரப்புடன் பேச்சு நடத்தப்படுகிறது.

வடமாகாணமானது பசுமை சக்தியை பெருமளவில் கொண்டுள்ளது. குளங்கள் மற்றும் காற்றாலைகள் மற்றும் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைப்பதன் மூலம் இங்கு அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அந்தச் சக்தியை இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை பெற்றுக் கொள்ளவும் முடியும். பசுமை வலுசக்தி மற்றும் பச்சை ஹைட்ரஜன் என்பவற்றை கொண்டு பசுமை பொருளாதாரத்தையும் உருவாக்க முடியும்.

மன்னாரில் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி எதிர்காலத்தில் வழங்கப்படும். புத்தளம் - மன்னார் வீதியை திறப்பது குறித்தும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும்.

மன்னார் வைத்தியசாலைக்கு சிரி ஸ்கேன் இயந்திரம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன விவசாயத்தை உருவாக்குவதற்கான முறையான திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்திக் குழு கூடி கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குமாறு அறிவுறுத்துகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்களைப் பாதுகாப்பதற்கும் மல்வத்து ஓயா திட்டத்தில் இருந்து மன்னாருக்கு வரும் நீரைப் பாதுகாப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று விரைவாக தேவைப்படுகிறது.

அடுத்த ஐந்து தசாப்தங்களுக்குள், உலர்வலய பகுதிகள் மழை அதிகரிக்கும் என்றும், வறண்ட பகுதிகளுக்கு மழை கிடைக்காமல் போகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கான தீர்வுகளை இப்போதிருந்தே தேட ஆரம்பிக்க வேண்டும்.

மடு மற்றும் சிவனொலிபாத மலை போன்ற புனித தளங்களின் நுழைவு வீதிகள் அவற்றை வழிப்பட வருவோருக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, அங்கு வரும் யாத்ரீகர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி முப்பது லட்சம் அபராதம் விதிப்பது நியாயமான செயலாக இருக்காது.

மன்னார் மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதி ஒருவர், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பொலிஸாரை தொடர்பு படுத்திக்கொண்டு மடு தேவாலயத்தை வழிபட வருவோருக்கான தேவாலய வீதியின் இரு புறங்களையும் தூய்மைப்படுத்தி அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும். எதிர்வரும் மடு தேவாலய உற்சவத்திற்கு முன்னதாக அந்த பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மன்னார் மறைமாவட்டம், வன பாதுகாப்பு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பிரதிநிதிகள் இணைந்து இந்த வீதியை சுத்தம் செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் மடு தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கு முன்னதாக நிறைவுபெற வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள சோதனைச் சாவடியை ஒரேயடியாக அகற்ற முடியாது. பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மன்னார் மாவட்டத்திற்கு தேவையான அபிவிருத்திகளை வழங்குவோம். இந்த ஆண்டு அதற்கான அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

மன்னாரைச் சுற்றி முன்னெடுக்கப்படவிருக்கும் விரிவான அபிவிருத்தி தொடர்பில் உங்களை தெரியப்படுத்த வேண்டியிருந்தது. அதனால் எவரிடத்திலும் நீங்கள் சிக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. இப்பிரதேசத்தில் விரிவான அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் மாவட்டமாக மன்னார் மாவட்டத்தை கட்டியெழுப்புவோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் நலன்கள் சார்ந்தனவாகவே எனது அரசியல் பயணம் அமையும்

## முஷாரப் எம்.பி. திட்டவட்டம்

(எம்.எப்.நவாஸ்)



மக்கள் பல்வேறு தேவைகளுடன் தங்களது பிரதிநிகளை தெரிவு செய்து, நாடாளுமன்றத்துக்கும் ஏனைய சபைகளுக்கும் அனுப்பிவிட்டு தாங்களது தேவைகள் நிறைவேறும் என்று இலவுகாத்த கிளியைப்போல் காத்துக்கொண்டிருகின்றபோது, இவர்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மக்களது தேவைகளை நிறைவு செய்யாது தாங்கள் சார்ந்த கட்சிகளின் நலன்களைப் பாதுகாப்பதிலேயே காலத்தை கடத்துகின்றனர் எனவும் அவ்வாறு கண்ணை மூடிக்கொண்டிருக்க தன்னால் முடியாது என காரைதீவு பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பிருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

50 லட்சம் ஷரூபா நிதி ஒதுக்கீட்டில் மாவடிப்பள்ளி கலாசார மண்டப புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, மாவடிப்பள்ளி பள்ளிவாசல்களின் தலைவர் வை.வி.ஏ. மனாப் தலைமையில் கலாசார மண்டப வளாகத்தில் 2024.06.14 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் சாய்ந்தமருது மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசங்களின் இணைப்பாளர் ஏ.எம். அஷாம் மௌலவியின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், தன்னை தங்களது பிரதிநிதியாக மக்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதன் பலனை மக்கள் அனுபவிக்கும் காலம் ஆரம்பித்துள்ளதாகவும் தன்னால் முடிந்தவரை மக்களது தேவைகளை பூர்த்தி செய்ய தன்னாலான அத்தனையையும் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வின்போது காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், அந்நூர் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் உதவித்தலைவரும் ஜாஹீர் பௌண்டேசன் மற்றும் சமூக அபிவிருத்தி சபையின் ஸ்தாபக தலைவருமான ஏ.எம். ஜாஹீர், மாவிப்பள்ளி வாசல்களின் செயலாளர் ஏ.எம்.பௌமி மற்றும் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் பங்குகொண்டனர். (05)

# நெத்திலி ஆற்றுக் கரையிலுள்ள வயல்களில் கள்ள மண் அகல்வு

## தடுக்க யாருமின்றி தொடர்கின்றது



முல்லைத்தீவு மாவட்டத்தின் விஸ்வமடு நெத்திலி ஆறு பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் பல விவசாயிகளின் வயல் நிலங்களில் இரவு பகலாகத் தொடர்ச்சியாக வயநிலங்களை காணிமையாளரின் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரங்களின் மூலம் மணல் அகழ்வு பல அடி ஆழத்திற்கு தோண்டப்பட்டு மணல் அகல்வு நடைபெறுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் புதுக்குடியிருப்பு பொலீஸார் மற்றும் கனியவளப் பிரிவினர் மற்றும் பொது அமைப்புகள் எவருமே இவ்விடயம் தொடர்பாகக் கண்டுகொள்வதில்லை எனவும் இதன் காரணமாக அப்பாவி விவசாயிகள் பல வழிகளிலும்,பாதிக்கப்படுவதாகவும் நெற்செய்கை மேற்கொள்ளும் பொழுது காட்டு யானையின், தொல்லை ஒவ்வொரு வருடமும் நெற்செய்கை மேற்கொள்ளும்பொழுது பெரும் அழிவு காட்டுயானைகளால் ஏற்படுவதும் பின்னர் வயல் அறுவடை முடிந்தும் மணல் கொள்ளை பாரிய அளவில்வயல் நிலங்கள சீர் செய்வதற்கான பணச்செலவு ஏற்படுவதாகவும் இச்சம்பவம் தொடர்பாக போலீஸ் நிலையங்களிலோ அல்லது வேறு எவரிடமும் முறைப்பாடு செய்ய முடியாத நிலையில் மணல் கொள்ளையர்களால் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தனிமையில் தமது வயல் பகுதிகளுக்கு பார்வையிடுவதற்கு செல்ல முடியாத அச்ச நிலை தோற்றியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உரிய தீர்வுகளை பெற்று விவசாய நிலங்களில் மணல் அகல்வை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (05 - 113)

# ஸாஹிரா மாணவர்களின் பெறுபெறுகள் இடைநிறுத்தம் ஆளுநரிடம் முறைப்பாட்ளித்த முஸ்லிம் மாணவிகள்





(ஹஸ்பர்.ஏ.எச்)

திருகோணமலை ஸாஹிரா கல்லூரியின் 70 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் மாணவிகளின் உயர்தர பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்ட விவகாரம் தொடர்பாகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் குறித்த முஸ்லிம் மாணவிகள் சனிக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் முறைப்பாடு செய்தனர்.

பரீட்சைகள் திணைகளத்தின் விதிமுறைகளுக்கு எதிராகக் காதுகளை மறைத்து பர்தா அணிந்து பரீட்சை எழுத முடியாத நிலையில், இம்மாணவிகள் அவ்வாறு பரீட்சைகள் எழுதியதால் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் தாம் எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலைமை குறித்து ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்த முஸ்லிம் மாணவிகள் , தமக்கு உரிய தீர்வை பெற்றுதர நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

மாணவிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், அவர்களுடைய பிரச்சினைகள் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய தீர்வை பெற்றுத்தருவதாக மாணவிகளிடம் உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ஷூப், மாகாண கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர் என பலர் கலந்து கொண்டனர். (05)

# சுகாதார சீர்கேடுடன் இயங்கிய நான்கு உணவகங்களுக்கு சீல்



கிளிநொச்சி கரைச்சி சுகாதாரப் பரிசாதகர்கள் பிரிவுக்குற்ப்பட்ட பகுதியில் சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை மேற்கொண்டதில் 4 உணவகங்கள் சுகாதாரடிசீர்கேட்டுடன் கானப்பட்டதையடுத்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார பரிசோதகர்கள் கிளிநொச்சி வைத்தியசாலை அண்டிய பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர். அங்கு மக்கள் பாவனைக்கு பயண்படுத்த முடியாத நிலையில் கானப்பட்ட உணவுப் பொருள்கள் காணப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பொழுது நான்கு உணவக உரிமையாளர்களுக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஷரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் இரண்டு உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு சுகாதார பரிசோதகரின் பரிசீலணையின் பின்னர் மீண்டும் உணவகங்கள் திறக்க அனுமதிக்கப்படலாமென சுகாதாரப் பரிசோதகர்கள் தெரி வித்தனர் (05 - 113)

# சாய்ந்தமருது காரியப்பர் வித்தியில் ஏ.ஆர்.எம்.மன்சூர் நினைவுப் போட்டி

(எம்.ஸாகிர்)

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூரின் நினைவு தினத்தை முன்னிட்டு, கமு௯கமு௯ எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தால் நினைவு தினக் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது. ' முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரின் கறை படியாச் சேவைகள்' எனும் தலைப்பில் கட்டுரை அமைய வேண்டும். கட்டுரைப் போட்டிக்கான விதிமுறைகளாக, போட்டிக்கான ஆக்கங்கள் தமிழ் மொழி மூலம் மாத்திரம் எழுதப்படல் வேண்டும், ஏ4 தாள்களின் ஒருபக்கத்தில் மாத்திரம், நான்கு தாள்களிற்கு குறையாமல் ஆக்கம் இருத்தல் வேண்டும், ஆக்கங்கள் அவரவர் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும், 10 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் உட்பட ஏனைய அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது, தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும், கட்டுரை ஆக்கங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும், ஆக்கத்தின் இறுதிப் பக்கத்தின் பின்புறம் உங்கள் பெயர், முகவரி மற்றும் வட்ஸ்அப் இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பவும், அத்துடன் அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ' ஏ.ஆர்.எம். மன்சூர் நினைவு தினப் போட்டி ' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.07.12 ஆம் திகதியாகும். முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி, கட்டுரைப் போட்டி இணைப்பாளர், கமு௯ கமு௯ எம். எஸ். காரியப்பர் வித்தியாலயம், பொலிவேரியன் கிராமம், சாய்ந்தமருது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் அதசியல் கட்சிகள் ஏன் அசமந்தமாக இருக்கின்றன?

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து முதன்மை எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் கட்சியும் அண்மையில் ஒரே மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்த இரு கட்சிகளினது தலைவர்களும் தாம் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என்றும் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு அதையும் தாண்டிச் சென்று புதிய அரசமைப்பு ஒன்றின் ஊடாகத் தீர்வு வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து தமிழ் மக்களுக்கு இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் தமது கருத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்திய பின்னர் அது பற்றி நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஒரு முக்கியமான கருத்தைத் தெரிவித்திருந்தார். அதாவது முக்கிய எதிர்க் கட்சியினரும் 13க்கு ஆதரவான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வேறு தடைகள் இல்லாத காரணத்தால் அது குறித்து ஒரு வட்டமேசை மாநாடு ஒன்றை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அவரது அழைப்புக்கு அரசுத் தலைவரிடம் இருந்து எந்தப் பதிலும் இதுவரையில் வரவில்லை. அரசுத் தலைவராகப் பதவிக்கு வந்தபோது 2022 மாசி 4 விடுதலை தினத்திற்கு முன்பாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று உறுதியளித்திருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அது தொடர்பாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து ஓரிரு கூட்டங்களையும் நடத்தியவர். அப்படியிருந்தும் இப்போது 13ஐ நிறைவேற்றுவதற்கான சாதக சூழலில் அதனைச் செய்வதற்கு அவர் முன்வரவில்லை.

இதில் இன்னும் ஆச்சரியத்திற்குரிய விடயம் என்னவென்றால், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்த தமிழ் கட்சிகளில் எதுவும் இப்போது அது குறித்து வாயே திறக்காதிருப்பதுதான். இலங்கை அரசிடம் மட்டுமல்லாது 13ஐ நிறைவேற்றவேண்டும் என்று கேட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் கடிதம் எழுதியவை இந்தக் கட்சிகள். இருப்பினும் இன்று அது குறித்து வாய்மூடி மௌனிகளாக இருப்பது ஏன் என்பது புரியவில்லை.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று ஏற்கனவே உறுதியளித்த அரசுத் தலைவர், தாம் ஆட்சிக்கு வந்தால் 13ஐ முழுமையாகச் செயற்படுத்துவோம் என்று கூறும் முதன்மை எதிர்க் கட்சிகள் என்று எல்லாமே சாதகமாக இருப்பதாகத் தோன்றும்போது தமிழ் அரசியல் கட்சிகள் எவையும் அதனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் இருப்பதன் சூத்திரம் புரியவில்லை. 13ஐ முழுமையாக நிறைவேற்றும்படி அவை கோருவது வெற்றுக் கோசம்தானா என்கிற கேள்வியும் எழுகிறது.

தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாகவே 13ஐ நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருக்கிறது. சஜித் பிரேமதாஸவும் அனுரகுமார திஸநாயக்கவும் 13ஐ முழுமையாக நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதியளித்துள்ள நிலையில், சந்தர்ப்பவசத்தால் அதனை அவர்கள் இருவரும் எதிர்க்கப்போவதில்லை. இதனைச் சாதகமாக்கிக்கொண்டு நிறைவேற்ற வேண்டியவற்றை உடனடியாக நிறைவேற்றிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

13 தொடர்பில் நிறைவேற்றப்படவேண்டிய விடயங்கள் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் அரசுக் கட்சியினாலும் தமிழ் மக்கள் கூட்டணியாலும் வழங்கபப்பட்டுள்ளன. அந்த யோசனைகளை நிறைவேற்றுவதன் மூலம் 13ஐ இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும். எனவே கரு ஜெயசூரியவின் கோரிக்கைக்கு ஆதரவளித்து, தற்போதைய சூழலில் 13ஐ முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தவேண்டும்.

அதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் வழிவகை ஏற்படுத்தப்படும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் ஏற்கனவே தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் நீண்ட காலத்திற்கு முன்பே முன்வைக்கப்பட்டுள்ளது. அனை நிறைவேற்றுவதன் மூலம் மாகாண சபைகளை மீண்டும் பதவிக்குக் கொண்டுவர –முடியும்.

# எனது பார்வையில் கற்பகதரு நூல் வெளியீட்டு விழா!

ஆங்கில ஆண்டு 2024, மாதம் ஆறு திகதி இரண்டு, நேரம் பிற்பகல் நான்கு மணி யளவில் கரம்ஸ்டவுன் சிவா விஷ்ணு ஆலயத்தின் பீகொக் மண்டபத்தில் கற்பகதரு நூல் வெளியீட்டு விழா நடை பெற்றது.

இயற்கையின் சுழற்சியால் மெல்பனில் குளிர்காலம் தொடங்கியி ருந்தது. மயக்கும் மாலைப் பொழுது மெல்பனில் குளிர்காலத் தொடக்கத்தில் அதிக குளிரின்றி வெயில் வெண்சாமரம் வீசியது. மகிழுந்தி லிருந்து இறங்கி மண்டபத்துக்குள் நுழைந்தேன். ஒழு ங்கு செய்யப்பட்டிருந்த மண்டபத்தில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த நூலாசிரியர் திரு. ஜெயராமசர்மா புன்முறுவல் தாங்கிய இன்முகத்தோடு வரவே ற்றார்.

நான்கு மணியிலிருந்து மக்கள் வந்து கொண்டிருந்தனர். மங்கல விளக்கேற்றல் மற்றும் வரவேற் புரை யைத் தொடர்ந்து திரு. மாவை நித்தியானந்தன் அவர் கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார். அதன்பின் அவர் தனது வாழ்த்துரையை வழங் கினார். “ஜெயராமசர்மாள எனக்கு நல்ல நண்பர். எங்கள் பாரதி பள்ளியின் கற்றல் , கற்பித்தல் செயற்பாட்டுக்குப் பலவழிகளில் உதவி இருக்கிறார். அவரின் ஆற் றலை , அவரின் பெறுமதியை - யாவரும் அறியாமல் இருக்கிறார்கள். அவர் அமைதியாய் தனது பணி களை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அவரை நாங்கள் அனை வரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுவது அவசியம். ஜெயரா மசர்மா ஒரு நல்ல மனிதர் “ என்று வாழ்த்துரையில் மாவை நித்தியானந்தன் அவர் கள் சுட்டிக் காட்டிப் பேசினார். தலைமையேற்ற எனக்கும் பொன்னாடை போர்த்தி பரிசுப் பொருளும் வழ ங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.

அதன்பின் திரு. ஜெயராமசர்மா எழுதிய கற்பகதரு நூலை நான் வழங்க அவர் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நான் ஆற்றிய தலைமையுரையை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

அன்னைத் தமிழுக்கும் ஆசான் வள்ளுவனுக்கும் இங்கு இன்பமு டன் வீற்றிருக்கும் ஈடற்ற தமிழன்பர் களுக்கும் உள்ளத்தே தோன் றி ஊற்றெனப் பெருக்கெடுக்கும் என் அன்பின் வணக்கத்தை ஏற்புடையதாக்கி வணங்குகிறேன். ஒப்பற்ற தமிழில் ஓங்குபுகழ் நீதி சொல்ல ஔவை எழுத ஏடு தந்த தருயாதெனில் அஃதே கற்பகதரு என்பேன்.

கற்பகம் என்றால் கல்லை பகுத்தல் என்று பொருள்படும். பகுத் தல் என்றால் வெட்டுதல் அல்லது செதுக்குதல் என்றும் பொருள் படும். கல்லில் எழுத்துக்களை வெட்டுவதால் கல்வெட்டு ஆனது. கல்லை பகுத்தலினால்தான் கற்பகம் ஆனது. இந்த கற்பகம் என் பதே மருவி நாளடைவில் சிற்பம் ஆனது. இது ஆய்வுக் கருத்து.

இன்னொரு கருத்தும் உள்ளது. அது ஆன்மீக கருத்து. புராணத்தில் கற்பகதரு என்ற ஒரு தரு இருந்ததாம். அது வேண்டுவனவற்றை எல்லாம் தருமாம். இங்கு நான் திரு. ஜெயராமசர்மா அவர்களையும் “கற்பகதரு “ என்பேன். நான் அப்பபடிச் சொல்ல காரணம் அவரும் வேண்டுவனவற்றை கொடுப்பார். அப்படி என்ன வெல்லாம் கொடுப்பார்?

கவிதை கொடுப்பார், கட்டுரை கொடுப்பார், கதை கொடுப்பார், நாவல் கொடுப்பார் நூலும் கொடுப்பார். அது மட்டுமா? அன்பைக் கொடுப்பார், பண்பைக் கொடுப்பார் நட்பையும் கொடுப்பார். இத்தகைய பன் முகத்த ன்மை கொண்ட இவர் ஒருநாள் கைபேசியில் சுப்பு என்று அழைத்தார். இவர் எப்போதும் சுப்பு என்று என்னை அன்போடு அழைப்பார்.

அழைத்தவர் எனக்கு ஒரு உதவிசெய்ய முடியுமா என்றார். சொல் லுங்கள் என்னால் முடிந்தால் செய்கிறேன் என்றேன். நான் ஆடி கார் வாங்கப் போகிறேன். கொஞ்சம் பணம் தேவை என்றார்.

அவரின் நகைச்சுவை நமக்குத் தெரிந்ததே. நானும் அதனாலெ ன்ன ஆடி என்ன ஃபெராரியே வாங்குங்கள் என்றேன். அதற்கு அவர் ஆடி ஆவணியெல்லாம் அப்புறம் பார்ப்போம். நான் ஒரு நூல் வெளியிடவுள் ளேன். அதற்கு தலைமை தாங்கவேண்டும் என்றார்.

மெல்பனில் தமிழறிந்த பல சான்றோர் பெருமக்கள் இருக்க என் னை தலைமைதாங்க தாங்க சொன்னதை எண்ணிப் பார்த்தபோது எனக்கு ஒரு திரைப்படப்பாடல் என் நினைவில் வந்தது. இதுதான் அந்தப்பாடல்.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்
வாழைபோல தன்ன தந்து தியாகியாகலாம்
மெழுகுபோல உருகி ஓட ஒளியை வீசலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்

இந்த பாடலில் எனக்கு பிடித்த வரிகள் இரண்டு.

மனமிருந்தால் பறவைக்கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள் ளே மலையைக் காணலாம்
மனமிருந்தால் பறவைக்கூட்டில் மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள் ளே மலையைக் காணலாம்

என்பவைதான் அந்த இரண்டு வரிகள். அந்த இரண்டு வரிகளை நான் இங்கு சொல்லக்காரணம் பன்முகத் தன்மை கொண்ட இவ ருக்கு என் பால் ஒரு மனமிருந்தது. அப்படி மனமிருந்ததால்த் தான் கடுகுக்குள்ளே மலையைக் காண் பதுபோல் தலைமை தாங் குமாறு என்னைக் கேட்டார்.

நான் சரி என்றதும் எனக்கு வாசிக்க நூலைத் தந்தார். அந்த நூலைப் பெற்றதும் எனக்கு இரட்டிப்பு மகி ழ்ச்சி. ஒன்று அந்நூ லின் முகப்பு. மற்றொன்று கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி. நூலின் முகப்பு பசுமையாக நெடி துயர்ந்த பனைமரங் களோடும் பசுமாடுகளோடும் இருந்தது தமிழ்நாட்டில் திருநெல் வேலியிலுள்ள எனது ஊரின் பனை மரங்களையும் பசுமாடு களையும் நினைவூட்டியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி.

அடுத்த மகிழ்ச்சிக்கு காரணம் கோயமுத்தூர் வேளாண்மைக் கல்லூரி. நான் கோவை வேளாண்மைக் கல்லூரியில் படிக்க விரும்பி பள்ளியில் விவசாயத்தை ஒரு பாடமாக எடுத்து படித்தேன். உதவித்தொகை கிடைக்கு மளவுக்கு உயர் மதிப் பெண்களையும் பெற்றேன். ஆனால் சூழ்நிலை என்னை பொறியியலாள னாக்கியது.

இந்த நூலுக்காக கோவை வேளாண்மைக் கல்லூரியுடன் தொடர் புகொண்டு பல தகவல்களை சேகரித்து ள்ளார் . நான் விரும்பிய அக்கல்லூரியில்தான் படிக்க முடியாது போனாலும் அக்கல்லூரியில் இருந்து பெறப்பட்ட தகவல்களை சுமந்திருக்கும் நூல் வெளியீட்டிலாவது தலைமை தாங்குகிறோம் என்ற மகிழ் ச்சி.

தலைமை தாங்க ஒப்புக் கொண்ட எனக்கு தலைவாழை இலை போட்டு அறுசுவை உணவைப் படைத்தது போன்றிருந்தது. உண வை உண்ணலாம் என்று எண்ணியதும் என் கையைப் பிடித்துக்கொண்டு சுவை மட்டும் பார்க்கலாம் உணவை உண்ண வேறொ ருவர் இருக்கிறார் என்றார். நீங்கள் தலைமை தாங்குங் கள் நயவுரை சொல்ல இன்னொருவர் இருக்கிறார் என்றார்.

அவர் யாருமல்ல நண்பர் ஆவூரான் சந்திரன் அவர்கள்தான். ஆஸ் திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தில் சேர்த்தும் விட்டார். துணைத் தலைவர் மற்றும் தலைவர் பகுதியை வகித்தேன். இப் போது அச்சங்கத்தில் செயற்குழுவிலும் இருக்கிறேன்.

தலைவர் நீங்கதான் நயவுரையை இன்னொருவர் வழங்குவார் என்றது திரைப்படமொன்றின் நகைச்சுவை காட்சியை நினை வூட்டியது. அதில் நகைச்சுவை நடிகர் கதாநாயகனைக் காட்டி மாப்பிள்ளை அவர்தான் அவர் போட்டிருக்கும் சட்டை என்னு டையது என்பதைப் போன்றிருந்தது.

சரி, அறுசுவையில் ஒன்றிரண்டை சுவைபார்க்கலாம் என்று புத்தகத்தை திறந்தால் அதனுள்ளே நாற்பது சுவை இருந்தது. இவர் பதினெண் கீழ்க்கணக்கில் வரும் இன்னா நாற்பது எழுதிய கபிலரைப் போல இனி யவை நாற்பது எழுதிய பூதஞ்சேந்தனா ரைப்போல சுவை நாற்பது எழுதயிருக்கிறாரே என்று புத்கத்தின் முகப்பு அட்டையை திருப்பிப் பார்த்தேன். கற்பகதரு என்றே இருந்தது. சுவை நாற்பது என்றிருந்தாலும் தப்பில்லை.

நாற்பது சுவையிருப்பதால் இரண்டு மூன்று சுவைகளை உங்க ளோடு பகிர்ந்து கொள்ளலாம் என்றிருக்கிறேன். முதலாவதாக முதல் அத்தியாயம்.

முதல் என்பதற்கு எப்போதுமே ஒரு தனிச் சிறப்பு உள்ளது. முத லில் பார்த்த திரைப்படம் முதலில் படித்த நூல் முதல் சம்பளம் என் பவற்றைப்போல. ஒரு நூலின் முதல் அத்தியாயமும் அது போலத்தான். முதல் அத்தியாயம் தொடர்ந்து படிக்கத் தூண்டும் விதமாக அமைய வேண்டும். சோர்வு தட்ட வைத்துவிடக் கூடாது.

எனவே நூலாசிரியர் அதில் மிகவும் கவனமெடுத்திருக்கிறார். தமிழ் கல்வி இயக்குனராக பணியாற்றிய இவருக்கு திட்டமிடல் கைவந்த கலை என்பதை முதல் சுவையிலேயே முகம் மலரவைத்துள்ளார். தமி ழென்றால் இனிமை. தமிழுக்கு இனிமை இலக்கி யம் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் முதல் சுவை யிலேயே இலக்கியத்தை தந்திருக்கிறார்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# எனது பார்வையில் கற்பகதரு ........

பனை மரத்தின் சிறப்பைக்கூற திருக்குறளை துணைக்கு அழை த்து தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக கொள் வர் பயன் தெரிவார் என்று நன்றியின் வெளிப்பாட்டுக்கு பனையை சான்றாக் குகிறார். என்றோ நட்டு சிறிதளவே தண்ணீர் ஊற் றியிருப்பர். ஆனால் அது வளர்ந்து பெரிதானதும் என் றோ ஊற்றிய நீருக்காக எண்ணற்ற பலன்களை கொடுப்பதைச் சொல்லி யிருப்பது சாலச்சிறந்து நிற் கிறது.

அது மட்டுமா? சிலப்பதிகாரத்தில் மூவேந்தர்களின் மாலைகளை ப்பற்றி சொல்லும்போது பனம்பூ மாலை களைப் பற்றியும் குறிப்பி டுகிறார். அறத்தை வலியுறுத்தும் நூலான நாலடியாரிலும் பனையின் பெருமை யை பறைசாற்றி முதல் சுவையிலேயே மனங்கவர்ந்து நிற்கிறார்.

அடுத்தது இருபதாவது சுவையைப்பற்றி சிறிது கூறுகிறேன். கல்லில் நார் உறிப்பது என்பதனை முடியாத செயலுக்கு உவமையாக கூறுவர். ஆனால் திரு. ஜெயராம சர்மா அவர்கள் கல்லில்தானே நார் உரிக்க முடியாது நாரில் நார் உரிக்கலாம் அல்லவா என்று நாரை நன்றாகவே உரித்திருக்கிறார்.

கல் என்றால் நமக்கு கல் மட்டும்தான் தெரியும். மிஞ்சிப் போனா ல் பாறை மற்றும் மலை மட்டுமே தெரியும். ஆனால் ஒரு சிற்பிக்கு அது வெறும் கல்லாக மட்டும் தெரியாது. மாறாக பலவிதமான சிற்பங் களாகவே தெரியும். அதுபோல நமக்கு வெறும் நாராகத் தெரிந்த நார் இவருக்கு வேறு விதமாகவும் இரு ப்பது தெரிந் திரு க்கிறது.

தமிழறிந்த தகைமையுடைய இவருக்கு அகநானூறு புறநானூறு தெரிந்திருப்தைப்போல் அகணிநார் புற ணிநார் என்று தெரிந்திரு ப்பதுடன் சோத்திநார் என்பது பற்றியும் தெரிந்திருக்கிறது. இப்படி நாரின் வகை களைப்பற்றி சொல்லியிருப்பதோடு மட்டும் விடா மல் எந்த நாரிலிருந்து என்னென்ன பொருட்களை யெல்லாம் தயாரிக்கலாம் என்று பட்டியலிட்டிருபது வியப்பாக உள்ளது.

பெண்ணின் பெருமையை பற்றி குறிப்பிட்டபடியே பனைமர த்துக்கு கட்டுரையை நகர்த்துகிறார். பெண்ணுக்குத் தான் கருப்பையும் அந்தக் கருப்பையில் கருவைச் சுமந்து வளர்த்து மகப்பேறு அடையும் பேறு கிடைத்துள்ளது என்று கூறும் இவர் பெண்பனையில் மட்டுமே குரும்பைகள் வருகின்றன. குரும்பை நுங் காக மாறுவதையும் பின் நுங்கு பனங்காயாகவும் பனம் பழமாகவும் மாறுவதை தென்னையோடு ஒப்பிட் டுக்கூறும் பாங்கை கட்டுரைக்குள் சென்றால் மட்டுமே உணர முடியும்.

நிறைவாகக நாற்பதாவது அத்தியாயத்திதை கரும்பு தின்னக்கூலி வேண்டுமா என்று தொடங்கியிருப்பது இத்தகைய நூலைப்படித்த நீங்கள் மற்றவர்களுக்கு பரிந்துரைக்காமல் இருக்க முடியுமா என் று நம்மை கேள்வி கேப்பதுபோல் உள்ளது. உண்மையிலேயே இந் நூலில் தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. நான் நயவுரை வழங்குபவருக்காக இரண்டு மூன்று அத்தியாயங்களை பற்றிமட்டுமே மேலோட்டமாக கூறியு ள்ளேன்.

சுவை என்றால் அதில் இனிப்பு இல்லாது போகுமா? இனிப்பு என்றவுடனே தேன், சீனி அல்லது சர்க்கரை நம் நினைவுக்கு வரும். அதுவும் குறிப்பாக கற்பகத்தருவை படிக்கும் போது பனஞ் சர்க்கரை அல்லது பனஞ்சீனி நம் நினைவுக்கு வருவதை தவிர்க்க இயலாது.

அந்த நினைவுக்கு தீனி போடுவதுபோல் பதனியிலிருந்து பனங் கட்டி, பனஞ்சீனி போன்றவை எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என் பவற்றையும் அதை இலங்கையில் எப்படி எப்போது எங்கெல் லாம் உற்பத்தி செய்தார்கள் என்பனவற்றை தெள்ளத் தெளிவாக அள்ளித் தந்திருக்கிறார். இதற்கும் மேலாக அந்ந நூலை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள். இதற்கும்மேல் இந்த நூலைப்பற்றி சொன்னால் ஆவூரான் சந்திரன் என்னைக் கோபித்துக் கொள் வார். ஏனென்றால் ஒருவருக்கு கொடுத்த பணியை பிடுங்கி இன் னொருவர் செய்யக கூடாதல்லவா? எனவே எனது உரையை நிறைவு செய்யலாம் என் நினைக்கிறேன்.

அதற்கு முன் ஒரு கவிதை. திரு. ஜெயராமசர்மா அவர்களைப் பற்றியது. அதாவது பழைய பாட்டிலில் புதிய.. தப்பாக நினைக்காதீர்கள், பழச்சாறு.

கற்பகதரு என நூலினைப் படைத்து
நற்புகழ் பெற்றாரையா - ஐயா
கற்பகதரு என நூலினைப் படைத்து
நற்புகழ் பெற்றாரையா - ஐயா
கற்பகதரு என நூலினைப் படைத்து
நற்புகழ் பெற்றாரையா
பற்பலரும் படித்து பயன்பெற்றின்புறவே.
பற்பலரும் படித்து பயன்பெற்றின்புறவே
பற்பலரும் படித்து பயன்பெற்றின்புறவே
அற்புதமாய் நூல் தந்த அழகுடை நம்பி
அற்புதமாய் நூல் தந்த அறிவுடை நம்பி
கற்பகதரு என நூலினைப் படைத்து
நற்புகழ் பெற்றாரையா - ஐயா
கற்பகதரு என நூலினைப் படைத்து
நற்புகழ் பெற்றாரையா!


நன்றி, வணக்கம்.

என் தலைமையுரையைத் தொடர்ந்து திரு. சந்திரன் சண்முகம் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டார். சந்திரன் தனது உரையில் " கற்பகதரு நூல் ஒரு ஆராய்ச்சி நூலாகும். ஜெயராமசர்மா ஐயா அவர்கள் எப்படித்தான் இவ்வளவு தகவல் களைத் திரட்டினாரோ என்று நினைத்துப் பார்க்கையில் பெரும் மலைப்பாகவே தென்படுகிறது. இதனைப் பாடப் புத்தகமாகவே வைத்தால் மிகவும் பொருத்தமாய் இருக்கும் என்று கருதுகின் றேன். ஐயா அவர்களின் கற்பகதரு நூலினை யாவரும் கட்டாயம் வாங்க வேண்டும். அனைவரின் வீடுகளிலும் இருக்க வேண்டிய ஒரு நூல்தான் கற்பகதரு என்று ஆவூரான் சந்திரன் குறிப்பிட்டு தனது ஆய்வுரையினை வழங்கினார்" . சிறப்புப் பிரதிகளை வழங் கியபின் திரு. ஜெயராமசர்மா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

நூலை வாங்க விரும்பியவர்கள் வரிசையில் நின்று பெற்றுக் கொண்டனர். அரங்கு நிரம்பிய கூட்டம் இருந்ததால் நூலை வாங்க நின்றவர்களின் வரிசையும் நீண்டிருந்தது. நிறைவாக நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டியுடன் காப்பி மற்றும் தேனீர் வழங்கப்பட்டு நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தது என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நல்ல நூல் வெளியீட்டு விழா. குளிராய் இருந்த பொழுதும் அரங்கு நிரம்பி இருந்தது.

" கற்பகதரு " நூல் வெளியீட்டு விழா களிப்பாய் காத்திரமாய் அமைந்திருந்தது. புலம் பெயர் நாட்டில் இடைவிடாது எழுதி பலவகையான நூல்களை வெளியிட்டுக்கொண்டிருக்கும் ஆளுமையான ஜெயராமசர்மா உண்மையில் ஒரு " கற்பகரு" தான் என்பதைக் கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும்.

-சங்கர சுப்பிரமணியன்.
மெல்பன்
ஆஸ்திரேலியா .

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு ஆளுநரால் பல்தேவை நிலையம் கிண்ணியா நகர சபைப் பகுதியில் திறப்பு







(ஹஸ்பர்.ஏ.எச்)

கிண்ணியா நகர சபையின் செயலாளரின் தலைமையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் பெரியாற்றுமுனையில் அமைந்துள்ள பல்தேவை கட்டடம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிண்ணியா நகர சபையின் முன்னாள் தவிசாளர்களான சட்டத்தரணி ஹில்மி மகஷூருப், எஸ்.எச்.எம். நளீம், முன்னாள் உறுப்பினர்களான எம்.எம். மஹ்தி, எம்.ஏ. கலிபத்துள்ளா, எம்.எச்.எம். ராபி ஆகியோரும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி, உலமா சபை தலைவர், சனசமூக அபிவிருத்தி அங்கத்தவர்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் எனப் பலரும் கலந்துசிறப்பித்தனர். (05)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வியன்கல்லை மக்களுக்கு உலருணவுப்பொதிகள் அன்பளிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வியன்கல்லைப் பகுதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பேருவளை சீனன் கோட்டைப் பகுதி வாழ் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உலர் உணவுப் பொதிகள் வியன்கல்லை ஜ/ம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாக சீனன் கோட்டைப் பிரமுகர்களால் கையளிக்கப்பட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 550 குடும்பங்களுக்கு இதன் போது உலர் உணவுப் பொதிகள் பள்ளிவாசல் நிர்வாகிகளான, அல்ஹாஜ் எச்.எம்.எம்.றியாஸ் மற்றும் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.இஷாக் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

வெள்ளம் ஏற்பட்ட கடந்த 2 ஆம் திகதி முதல் சீனன் கோட்டைப் பகுதி சமூக சேவையாளர்கள் குழுவினர் வியன்கல்லைக்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளை இரவு, பகல் என வழங்கியதோடு, நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு படகு மூலமும் சென்று இவர்கள் உதவிக் கரம் நீட்டியுள்ளனர். இவர்களின் தியாகமிகு சேவைகளுக்கும், உலர் உணவுப் பொதிகள், சமைத்த உணவுகளை உடனுக்குடன் பெற்றுக்கொடுத்த சீனன் கோட்டை வாழ் மக்களுக்கு வியன்கல்லை வாழ் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (05)



## சிக்கியுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அதில் 53,000 பேர் சீனர்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

## இந்த ஆண்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசவருமானத்தைஅதிகரித்துக் கொள்வதற்காகவே புதிதாக வரிகள் அமுல்படுத்தப்படுகின்றன. தற்போது அமுலில் உள்ள வரிகள் 2027 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டில் இருக்கும். அரச நிதி முகாமைத்துவசட்டத்துக்குஅமைய சகலஆளும்தரப்புகளும்செயற்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிதி முகாமைத்துவ பொறுப்புசட்டத்தைசந்தர்ப்பத்துக்கு ஏற்ப திருத்தம் செய்த சகல அரசாங்கங்களும் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டங்களை எமது ஆட்சியில் மறுசீரமைப்போம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது மேடைபேச்சுக்கு மாத்திரம்வரையறுக்கப்படும். நடைமுறைக்கு அது சாத்தியமாகாது.பெட்டிக்கடையை நிர்வகித்தவர்களால் நாட்டை நிர்வகிக்க முடியாது.

நாட்டு மக்களை தவறாக வழிநடத்திஆட்சிக்குவரும்ஆளும் தரப்புகள் வெகுநாட்களுக்கு ஆட்சியில்இருக்காது.எவர்ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்துடன் தான் நாட்டை நிர்வகிக்க வேண்டும்.இதுவே யதார்த்தம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கவை. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கும் வேட்பாளருக்கு முழுமையான ஆதரவுவழங்குவேன்.பொருளாதார விவகாரத்தில் நாட்டு மக்களிடம் இனியும்பொய்யுரைக்கவேண்டிய தேவை கிடையாது.போலியான அரசியல்வாக்குறுதிகளினால்தான் நாடுவங்குரோத்துநிலையடைந்தது என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியும். அரசாங்கம் மாற்றமடையும்போதுபொருளாதார கொள்கைகளைமாற்றியமைக்கும் நிலை மாற்றமடைய வேண்டும்.

சிறீலங்காபொதுஜனபெரமுன எவ்வாறான நிலைப்பாட்டில் செயற்படுகிறது என்பதை நான் அறியவில்லை.2022ஆம்ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்கவை சிறந்த தீர்வாக தெரிவு செய்ய முடியும் என்றால் ஏன் அந்த தீர்மானத்தை இந்த ஆண்டும் எடுக்க முடியாது.பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டம் பொதுஜன பெரமுனவிடம் இருந்தால் தாராளமாக முன்வைக்கலாம் என்றார்.

## தீயணைப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், 18 கோடி ரூபா மதிப்பீட்டில் இடைநிறுத்தப்பட்ட பணிகள் கடந்த ஆண்டு டிசம்பரில் இரண்டாவது ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சுமார் 9 கோடி ரூபா கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கதிர்காம யாத்திரை வீதி வழிப் பயணத்தை பிற்போட்டமை பெரும் கவலையளிக்கிறது

## இராவணன் சேவா அமைப்பின் தலைவர் கே.செந்தூரன் தெரிவிப்பு



கதிர்காம பாதை யாத்திரையின் போதான அதன் வீதி வழி பயணத்தை பிற்போட்டமை பெரும் கவலையளிக்கிறது என இராவணண் சேவா அமைப்பின் தலைவர் கே.செந்தூரன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை)இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது:

அவசரமாக சென்று யாத்திரைகளை நிறைவேற்ற முடியாது பக்தர்களின் வருகையை குறைக்கும் செயலாக இந்த நாள்கள் பிற்போடப்பட்டமை காணப்படுகிறது .பண்டைய காலம் தொடக்கம் மரபு ரீதியாக இது நடைபெறுகின்றது. நேர்த்தி கடனுக்காக சிறுவர்கள் முதல் பெரியார்கள் ,கர்ப்பிணி தாய்மார்கள் என உகந்தை முதல் கதிர்காம யாத்திரைகளை சைவமுறைப்படி மேற்கொள்வது வழக்கம். ஆனால் தற்போது அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை காட்டுப் பாதை திறப்பு பிற்போட்டிருப்பதும் குறுகிய காலத்தில் செய்வதென்பதும் தடுக்கும் பக்தர்கள் கதிர்காமம் செல்வதைத் செயலாக காணப்படுகிறது.

சிங்களவர்கள் தமிழர்கள் எனப் பலரும் கதிரகாம யாத்திரையை மேற்கொள்வது வழக்கம்.ஈழத்து சைவர்களின் வாழ்வியலில் ஒன்றாக காணப்படுகிறது. நடந்து சென்று நேர்த்தி கடனை நடந்து சென்று ஆன்மீகம் தொன்று தொட்டு நடந்து வருகிறது கடினமான பாதை காடுகள் ஊடாக செல்ல வேண்டும்.இந்த மாதம் 30 ஆம் திகதி திறக்கப்பட இருந்த நிலையில் நாள்கள் பிற்போடப்பட்டுள்ளன. நான்கு நாள்களுக்குள் இதனை நிறைவேற்றுவது கடினம் பல பாதை யாத்திரை குழுக்கள் தங்களது கண்டணத்தை தெரிவித்து வருகின்றன வழமை போன்று இந்த பாத யாத்திரை நடைபெறவேண்டும்

உரிய அரச தரப்பினர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

# புனித ஹஜ் பெருநாள் தொழுகை கிழக்கில் இரு வேறு இடங்களில்





(பாறுக் ஷிஹான்)

ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகை கிழக்கு மாகாணத்தின் இருவேறு இடங்களில் சர்வதேச பிறை அடிப்படையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று மக்களுக்கான பெருநாள் தொழுகை ஏற்பாடுகள் அக்கரைப்பற்று மைதானத்தில் நடைபெற்றது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியில் பெருநாள் திடல் தொழுகை நடைபெற்றது.

இப்பெருநாள் தினமானது இறை தூதர்களில் ஒருவரான இப்றாஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூறும் விதமாக இஸ்லாமிய நாட்காட்டியின் பிரகாரம் துல்ஹஜ் மாதம் பிறை பத்தில் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

வசதிபடைத்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஐந்து முக்கிய கடமைகளில் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா சென்று மார்க்கக் கடமைகளில் ஈடுபடுவார்கள்.

உலகின் சகல பாகங்களில் இருந்தும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனித மக்கா மாநகரில் மொழி மற்றும் பிரதேச வேறுபாடுகளை கடந்து இலட்சக் கணக்கானவர்கள் ஒன்றுகூடி ஹஜ் வழிபாடுகளில் ஈடுபடுவது இந்த தினத்தின் விசேட அம்சமாகும்.

# மாணவர்களுக்கு உளவியல் வழிகாட்டல்

(எம்.எம்.ஜெஸ்மின்)

பொலன்னறுவ அல் ஹிக்மா சமூக அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைப்பின் பூரண அனுசரனையுடன் பொலன்னறுவ அல்-றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான உளவியல் வழிகாட்டல் நிகழ்ச்சி பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த உளவியல் வழிகாட்டல் நிகழ்ச்சியினை பிரபல உளவியல் வழிகாட்டல் நிபுணர் அஷ்ஷெக் ஆதில் ஹஸன் நடத்தினார்.

இந்த நிகழ்வு மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதில் அஷ்ஷெக் ஆதில் ஹஸன் அவர்களுக்கு பாடசாலையால் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழரசுக்கட்சி நிர்வாக தெரிவுக்கு எதிரான வழக்கை ஒரே நிலைப்பாட்டுக்கு வந்து முடிவுறுத்தத் தீர்மானம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



தமிழரசுக்கட்சி தொடர்பான வழக்கில் எதிராளிகள் அனைவரது மறுமொழியையும் ஒரு நிலைப்பாடாக பதிவு-செய்து வழக்கை முடிவுறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குதெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்று (16.06) காலை இடம்பெற்றது. அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்பது தொடர்பான விளக்கம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. கடந்த தவணையில் எதிராளிகளாக பெயரிடப்பட்ட ஏழு பேருடன் கிளிநொச்சியை சேர்ந்த ஜீவராஜா என்பவர் தன்னையும் இணைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் செய்திருந்தார்.

அவரது விண்ணப்பம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின், அந்த ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்காக கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் சார்பில் ஆயராகிய சட்டத்தரணி அவகாசம் வழங்குமாறு தவணை கேட்டிருந்தார். நானும் அப்படி கேட்டிருக்கின்றேன். அதனையடுத்து எதிர்வரும் ஜுலை 19 ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்படவுள்ளது.

அந்த வகையில் கடந்த தவணைக்கு முன்பாக கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்திற்கமைய வழக்கை முடிவுறுத்திக் கொள்வது தொடர்பாக நீதிமன்றிலே நான் கூறியிருக்கின்றேன். எதிராளிகள் முன்வைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பாக வழக்காளி தன்னுடைய நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகவே கடந்த தவணை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுபோன்ற சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் போது அதில் பல படிமுறைகள் உள்ளன. அவற்றை கடந்த பின்னரே வழக்கு விசாரணைக்கு நியமிக்கப்படலாம். சாதாரணமாக இவ்வாறான வழக்கில் ஒரு வருடத்திற்கு பின்னரே முதலாவது விளக்கத்திற்கான திகதி குறிக்கப்படும். ஆனால் இந்த வழக்கில் வழக்கை முடிவுறுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக நாங்கள் குறுகிய தினத்தை கேட்டிருக்கின்றோம்.

அன்றையதினம் வழக்காளி நீதிமன்றிலே தெரிவித்த விடயத்துடன், எதிராளிகள் ஏழு பேரும் அழைத்திருக்கின்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் மூன்று வித்தியாசமான நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டன.

குறிப்பாக நானும் கட்சியின் பொதுச் செயலாளரும், நிர்வாக செயலாளரும் ஒரு நிலைப்பாட்டையும், மாவை சேனாதிராஜா மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் வேறொரு நிலைப்பாட்டையும், சிறிதரன், குகதாசன் ஆகியோர் இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் கட்சி ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்காத சூழ்நிலையில் நாங்கள் எப்படி எமது நிலைப்பாட்டை இதற்கு தெரியப்படுத்துவது என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இருப்பினும் கட்சி தற்போது ஒரு நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது. வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி தெரிவுகளை மீள செய்வதற்கு நான் இணங்குகின்றேன் என்று சிறிதரன் கூறியிருந்தார். அதனை நீதிமன்றிலே நான் சொல்லியிருக்கின்றேன்.

இப்போது நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வந்துள்ள காரணத்தால் நாங்கள் ஏழு பேரும், எட்டாவது எதிராளியான ரத்தினவடிவேலும் இணைந்து, வழக்கிலே எமது மறுமொழியை ஒரு நிலைப்பாடாக பதிவு செய்து வழக்கை முடிவுறுத்துவதற்காக வழக்காளியோடு இணக்கப்பாட்டிற்கு வருகிறோம் என்று கூறி வழக்கை முடிவுறுத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக வழக்காளியின் சட்டத்தரணியோடு நான் பேசியிருக்கின்றேன். ஏனையவர்களின் சட்டத்தரணிகளுடன் பேசி பொது நிலைப்பாட்டிற்கு இணங்கிகொள்வதுடன், எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வவுனியாவில் மத்தியகுழு மீண்டும் கூடி அந்த மறுமொழியின் வரைவை மத்திய செயற்குழுவிற்கு சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தை பெறவேண்டும்.

அதனை அடுத்த தவணையில் நீதிமன்றில் சமர்ப்பித்து அதன் பின்னர் எமது இணக்கப்பாட்டை செய்யலாம் என்று தீர்மானித்திருக்கின்றோம். - என்றார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற இக் இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், சட்டத்தரணி கே.வி.தவராசா உட்பட மத்தியகுழு உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்

(05-100)



# கங்குவேலியில் பஸ் தடம்புரள்வு

(எச் எம் ஹலால்தீன்)


மட்டக்களப்பு திருகோணாமலை பிரதான வீதியில் தனியார் பஸ் விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்தச் சம்பவம் கங்குவேலி - புளியடிச்சோலை பாலத்திற்கு அருகே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வீதியை விட்டு விலகிய பஸ் அருகில் உள்ள நீரோடைக்கு அருகில் புரண்டுள்ளது.

இந்த பஸ்ஸில் சாரதி மாத்திரம் இருந்துள்ளார் எனவும் எவருக்கும் எந்த ஆபத்தும் இல்லை எனவும் தெரியவருகின்றது. (05)

# தமிழ் பேசும் சிறுபான்மை சமூகங்களை சார்ந்து ஜனாதிபதி தேர்தலில் புதிய வியூகத்துடன் பஷீர்



உற்பத்தி திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் அடுத்த வாரங்களில் நாட்டுக்கு திரும்பி வருகின்றார்.

தனிப்பட்ட வகையில் சில காலம் வெளிநாடு சென்றிருந்த இவர் வரவுள்ள ஜனாதிபதி தேர்தல் குறித்த விவகாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் ஒட்டுமொத்தமாக தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்கள் சார்ந்து ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்காக வருகின்றார் என்று அறிய கிடைக்கின்றது.

குறிப்பாக போருக்கு பின்னரான இலங்கையில் தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்களை அரசியல் அடிப்படையில் இணைப்பதற்கான பொன்னான வரலாற்று வாய்ப்பாக இத்தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்பது அவருடைய வியூகத்தின் அடிப்படை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக விரைவில் ஊடக அறிக்கை ஒன்றை பஷீர் சேகுதாவுத் மும்மொழிகளிலும் வெளியிடுவார் என்றும் தெரிய வருகிறது. (05-23)

# அம்பாறை வீரமுனை கிராமத்திற்கான வளைவு கோபுரம் அமைப்பதில் முறுகல்







அம்பாறை வீரமுனை கிராமத்தின் வரவேற்பு வளைவு கோபுரம் அமைப்பதற்கான முயற்சி நீண்ட காலமாக அக்கிராம மக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அரசியல் அதிகாரம். நிர்வாக பக்கச்சார்புகள் காரணமாக வரவேற்பு கோபுரம் அமைப்பதற்கான அனுமதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வந்திருந்தது

பரிபால சபையினரும் வீரமுனை மக்களும் இணைந்து கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ சந்திரகாந்தன் அவர்களிடம் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி வளைவு கோபுர பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்காக குறித்த பகுதிக்கு இராஜாங்க இமைச்சர் சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அதன்போது வரவேற்பு கோபுரத்தை அமைப்பதற்கு எதிராகவும் அமைச்சர் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எதிராகவும் பொலிஸாரினால் நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டு இராஜாங்க அமைச்சர் குறித்த இடத்திற்கு வருகை தந்திருந்தபோது பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதித்துறையை மதித்து அவ்விடத்தில் இருந்து இராஜாங்க அமைச்சர் வெளியேறியிருந்த நிலையில், பொதுமக்களால் குறித்த பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்த அடிப்படை மதவாதக்குழுக்களுக்கும் கிராம மக்களுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டதனை தொடர்ந்து பொலிஸாரினால் மேற்படி நிர்மாணப்பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் காரைதீவு மக்கள் தாங்கள் ஒருமித்து நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் வளைவுக் கோபுரம் அமைப்பதில் உள்ள நியாயப்பாடு தொடர்பில் எடுத்துக்கூறியிருந்ததோடு தங்கள் கிராம எல்லைக்குள் அடையாள சின்னங்களை நிறுவுவதற்கு இவ்வாறான தடைகளை ஏற்படுத்துவதன் ஊடாக சமூகங்களுக்கு இடையில் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் செயற்பாடாக இது அமையும் என சுட்டிக்காட்டி இருந்தார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் பிரதிநிகளுடனும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர், அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசிய இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் குறித்த பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதன் ஊடாக வீரமுனை மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்குமாறு கூறியிருந்தார

.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தினால் ஊடகவியலாளர்களுக்கு மேலங்கிகள்





(எஸ்.அஷ்ரப்கான்)

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் ஊடகவியலாளர்களுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான புதிய மேலங்கி அறிமுகமும் அதனை கையளிக்கும் நிகழ்வும் போரத்தின் தலைவரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் மற்றும் அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் செயலாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் அக்கரைப்பற்று எப்.என்.பீச் ரிசோட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக நாபீர் பௌண்டேசன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், பொறியியலாளருமான உதுமாங்கண்டு நாபீர் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு மேலங்கிகளை வழங்கி வைத்தார்.

இங்கு அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டதுடன் கருத்துரைகளும் வழங்கினர். (05)

# மைதானத்துக்குள் புகுந்து வாள் வெட்டுத் தாக்குதல்

## யாழ்ப்பாணத்தில் நால்வரை மடக்கிப் பிடித்த பிரதேசவாசிகள்

யாழ்ப்பாணத்தில் கரபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெறவிருந்த மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பலொன்று வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மீசாலை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்ட 12 பேரைக் கொண்ட கும்பலில் நான்கு பேரை பிரதேசவாசிகள் மடக்கிப் பிடித்து, நையப்புடைத்து, மின்கம்பங்களில் கட்டிவைத்த நிலையில், கொடிகாமம் பொலிஸார் சந்தேக நபர்களை ஊரவர்களிடமிருந்து மீட்டு, அவர்களை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகமொன்றால் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வந்த நிலையில், அதன் இறுதிப் போட்டி சனிக்கிழமை நடைபெறவிருந்தது.

மைதானத்தில் கழக உறுப்பினர்கள் அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோது 12 பேர் கொண்ட வன்முறை கும்பல் மைதானத்துக்குள் கூரிய ஆயுதங்களுடன் நுழைந்து, போட்டிக்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்த இளைஞர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது.

அவ்வேளை, இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், ஊரவர்கள் ஒன்று திரண்டு தாக்குதல் நடத்தியவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றபோது, கும்பலைச் சேர்ந்த அனைவரும் தப்பியோடியுள்ளனர்.

தொடர்ந்தும் பிரதேசவாசிகள் அவர்களை துரத்திச் சென்று, நான்கு பேரை பிடித்து, அடித்து, பின்னர் மின்கம்பங்களில் கட்டி வைத்துள்ளனர்.

இதனையறிந்த கொடிகாமம் பொலிஸார், சம்பவ இடத்துக்கு சென்று மின்கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்த நால்வரையும் மீட்டு, அவர்களை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர்.

தாக்கிவிட்டு தப்பிச் சென்ற ஏனையவர்களையும் கைது செய்ய உரிய நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வருகின்றனர். (05)

# யாழ். மாவட்ட ஆலயங்களை சீரமைப்பதற்கு நிதி உதவி

## அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்



யாழ். மாவட்டத்திலுள்ள ஒருதொகுதி ஆலயங்களை சீரமைத்து புனரமைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. தமது ஆலயங்கள் மீள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கான நிதியுதவியை பெற்றுத்தருமாறும் ஒருதொகுதி ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த தரப்பினருக்கான காசோலைகள் சனிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து கலாசார திணைக்களத்தின் 2024 இற்கான நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியே குறித்த ஒரு தொகுதி ஆலயங்களுக்கு நிதியுதவியாக வழங்கி வைக்கப்பட்டன.

இதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட சுமார் 25 ஆலயங்களுக்கு தலா இரண்டு லட்சம் ஷரூபா வீதம் நிதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)





# மட்டு நகரில் சர்வதேச யோகா தின நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வாழும்கலை அமைப்பு நேற்று (ஞாயிற்றுகிழமை) காலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் யோகா பயிற்சி வழங்கியது. இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமினி சாத்வி ஜீ இப் பயிற்சியை வழங்கினார். 13 வயதுக்கு மேற்பட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். (05)

# மற்றோர் வைத்தியர் நீரில் மூழ்கிச் சாவு காரைதீவை உலுக்கும் தொடர் சோகம்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு இருநாள்களில் இரண்டாவது வைத்தியரை இழந்திருக்கிறது.

காரைதீவைச் சேர்ந்த முன்னாள் கணித பாட உதவிக் கல்விப் பணிபபாளர் எஸ்.இலங்கநாதன் ஆசிரியை விஜயலட்சுமி தம்பதியினரின் மூத்த புதல்வன் கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர் இ. தக்சிதன் எனும் 34 வயதுடைய வைத்திய உத்தியோகத்தரே அகால மரணமடைந்தவராவார்.



கல்முனை ஆதார வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர் டாக்டர் இ.தக்சிதன் தமது குடும்பத்துடன் உகந்த மலை முருகன் ஆலயத்துக்கு சென்று வரும் வழியில் பாணமைக்கடலில் தவறிவீழ்ந்த காரணத்தால் இம் மரணம் சம்பவித்திருக்கின்றது .

இவருக்கு மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர் வைத்தியர் இ.மிதுரன் எனும் சகோதரனும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் பயிலும் இ நிஷாகரி எனும் சகோதரியும் உள்ளனர்.

அன்னாரின் பூதவுடல் பாணம வைத்திய சாலையில் வைக்கப்பட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நற்பிட்டிமுனையிலுள்ள அவரது அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நற்பிட்டிமுனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவரது அகால மரணம் மீண்டும் காரைதீவை சோகமயமாக்கியுள்ளது. (05)

# இசை நிகழ்ச்சியில் நடனமாடிக்கொண்டிருந்த இளைஞர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை

*களுத்துறை, கமகொட பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*தொடங்கொட, ஜன உதான பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*தாக்கிய நபர் அதே பிரதேசத்தில் வசிக்கும் பெண் ஒருவரை திருமணம் செய்துள்ளார் எனவும், சில நாள்களுக்கு முன்பு அவரது மனைவியை விட்டுப் பிரிந்து தனியே வாழ்ந்து வருகிறார் எனவும் கூறப்படுகிறது.*

*இந்நிலையில் இந்த இசை நிகழ்ச்சியை பார்வையிடச் சென்ற மனைவி, தான் பணி புரியும் ஆடை தொழிற்சாலையில் இளைஞர் ஒருவருடன் சேர்ந்து நடனமாடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*மனைவி இளைஞருடன் நடனமாடுவதை கண்ட சந்தேக நபர், நடனமாடிக்கொண்டிருந்தவரின் கழுத்தை கூரிய ஆயுதத்தால் அறுத்து கொலை செய்துள்ளார் என மேலும் பொலிஸார் தெரவித்தனர். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# களை கட்டிய அம்மன் சடங்கு





சம்மாந்துறை கோரக்கர் அருள்மிகு ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கு பகல் இரவு பூஜைகளுடன் களைகட்டி வருகிறது. ஆலய பிரதம பூசகர் மு.ஜெகநாதன் தலைமையில் ஏராளமான பக்தர்கள் சகிதம் சடங்கு இடம்பெற்று வருவதைக் காணலாம். படங்கள். வி.ரி.சகாதேவராஜா (05)

# வைத்தியர்களின் பங்களிப்புகள் மட்டும் வைத்திய சேவையை வழங்க போதாது

## இமாமுத்தீன் மௌலானா தெரிவிப்பு

(அபு அலா)

நோயாளர்களுக்கு சிறந்த வைத்திய சேவைகளை வழங்குவதாக இருந்தால் வைத்தியர்களின் பங்களிப்புகள் மட்டும் போதாது. அதற்கான வைத்திய உபகரணங்கள், மருந்துகள், ஆளணிகள் போன்ற பல தேவைகள் உள்ளதென கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் இமாமுத்தீன் மௌலானா தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக் குழு உறுப்பினர்களின் நிர்வாகத் தெரிவும், முதலாவது நிர்வாக சபைக் கூட்டமும் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம். வபா தலைமையில் வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

வைத்தியசாலையின் சேவை மிகத் திறன்பட இயங்க வேண்டுமாக இருந்தால் அந்த வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகள் நல்லனவாக இருக்க வேண்டும். அத்துடன் வைத்தியசாலை மீதான பார்வை மற்றும் தொடர்பாடல்கள் மிக அதிகமாக இருந்தால்தான் அந்த வைத்தியசாலையின் வைத்திய சேவைகளுடன் அபிவிருத்திகளும் சிறந்த முறையில் இடம்பெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு அவர்கள் சுகம் பெற்றவர்களாக, திருப்தியான முறையில் செல்லவேண்டும் என்பதே எமது எல்லோருடைய நோக்கமாக இருக்கவேண்டும். - என்றார்.

வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் நெபுலைசர்

ஒன்று இல்லாமல் பாரிய சிரமங்களை நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம் என்று வைத்தியசாலை பொறுப்பதிகாரியால் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டபோது ஏ.என்.எவ். தனியார் மருத்துவ உபகரண விநியோக நிறைவேற்றுப் பணிப்பாளரும் அபிவிருத்திக் குழு உறுப்பினருமாகிய எ.எல்.எ.கபூர் உடனடியாக நெபுலைசர் ஒன்றை வழங்கி அக்குறைபாட்டை நிவர்த்தி செய்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக் குழு நிர்வாகத்தினர்.



தலைவராக வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.வபா நிறுவனத் தலைவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக ஆசிரிய ஆலோசகர் எம்.எப்.முஹம்மது நழீர் தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாளராக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஏ.சி.முஹம்மது றியாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

உப செயலாளராக ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தெரிவு செய்யப்பட்டார்.

உறுப்பினர்களாக,

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவருமான ஏ.எச்.ஹனீஸ், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், அதிபரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமாகிய ஏ.எல்.அஜ்மல், ஏஎன்எவ். தனியார் மருத்துவ உபகரண நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எ.எல்.எ.கபூர், அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளர் ஏ.எல்.முஹம்மட் புகாரி இலங்கை வங்கி அட்டாளைச்சேனை கிளையின் ஓய்வுபெற்ற முகாமையாளர் ஏ.சி.கியாஸ்டீன், மக்கள் வங்கி உத்தியோகத்தர் எம்.ஐ.முஹம்மது நபீல், ஏ.பி.தீனுல்லாஹ், ஓய்வுபெற்ற சமுக சேவை உத்தியோகத்தர் எம்.ஐ.அன்வர், ஓய்வுபெற்ற கிராம சேவகர் எஸ்.எல்.ஏ.சமட், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் நிருவாக சபை உறுப்பினர் எம்.ஏ.றமீஸ், ஓய்வுபெற்ற எம்.ஏ.சிறாஜ் அஹமட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

# உடைந்த பாலத்தினை புனரமைக்க கோரிக்கை!

(எஸ்.எல்.நௌபர்)

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் மூதூர்-சூராங்கல் வீதியில் மூதூர் சாபி நகர் கிராம சேவையாளர் பிரிவில் வெள்ள நாவல் எனும் பகுதியில் மகாவலி ஆற்றின் மேலால் போடப்பட்டுள்ள இரும்புக் கேடர் பாலமானது வாகனங்கள் போக்குவரத்துசெய்யமுடியாதவாறு மிக மோசமாக சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. இதனை புனரமைத்துத் தருமாறு பொதுமக்களும் விவசாயிகளும் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனை மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டுச்சென்றுள்ளனர். இதனை புனரமைக்கவேண்டியதன் தேவைப்பாடுகள் குறித்து மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இங்குள்ள பொதுமக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் அதிகாரிகளிடம் இதுவிடமாக சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (05)







# வெள்ளிப் பதக்கம் வென்றார் கல்முனை வீரர் ஆஷாத்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை மாஸ்டர்ஸ் தடகள நடத்தும் 37 ஆவது வருடாந்த தேசிய மெய்வல்லுநர் போட்டியில் கல்முனை மாநகர சபையின் தீயணைப்பு படை உத்தியோகத்தரும் சனிமௌனட் விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட வீரருமான ஏ.எல்.எம் ஆஷாத் பங்குபற்றி, ஈட்டி எறிதல் போட்டியில் 2ஆம் இடத்தினை பெற்று - வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார்.

இப்போட்டி சனிக்கிழமை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இந்தச் சாதனையை படைத்து அம்பாறை மாவட்டத்திற்கும் கல்முனை மாநகரத்திற்கும் பெருமையைத் தேடித்தந்துள்ள மாநகர சபை உத்தியோகத்தர் ஏ.எல்.எம் ஆஷாத்திற்கு கல்முனை மாநகர சபை சமூகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. (05)

# சிலாபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு



(எம் சியாஜ்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடல் சனிக்கிழமை சிலாபம் பா.இன் கடற்கரை ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்ன அமைச்சின் செயலாளர் விமலவீர மற்றும் அமைச்சின் ஊடக செயலாளர் நல்லப்பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று சென்று நாடு திரும்பியவர்களின் ஒளிப்பதிவு வீடியோ பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்த ஆறு ஊடகவியலாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

மேற்படி ஊடக ஒன்றுகூடலில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள மும்மொழிகளையும் சேர்ந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த சுமார் 30 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2024இல் வெளியிடப்பெற்றது